பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 109

சனிக்கிழமை
15 மார்ச் 2025

பங்குனி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 15
புதுக்குடியிருப்பில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞரொரு 11

அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு நீதியை ஏன் வழங்கவில்லை?

ஆணைக்குழுக்களின் அறிக்கையில் அரசியல்: முன்னிலை சோஷலிசக் கட்சி கடும் காட்டம்!

**கொழும்பு, மார்ச் 15**
**வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் அரச பயங்கரவாதத்தால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசியல் நோக்கங்களுக்காகவே ஆணைக்குழு அறிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரதான செயலாளர் குமார் குணரத்னம் தெரிவித்தார்.** 11

## 97 வீதமான கண்ணிவெடிகள் கிளிநொச்சியில் அகற்றம்

மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 15
கிளிநொச்சி மாவட்டத்தில் 97.2 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 37 குடும்பங்களை இன்னும் மீள்குடியேற வேண்டியுள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் முரளிதரன் 11

## வடக்கில் 16,000 ஏக்கரில் தெங்கு முக்கோணவலயம்

கொழும்பு, மார்ச் 15
வடமாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கரில் தெங்கு முக்கோணவலயம் உருவாக்கப்படவுள்ளது என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்தில் தெங்கு முக்கோண வல 11

27 வருட தவத்துக்குப் பின்னர்

## நாடாளுமன்றத்தில் பட்டலந்த அறிக்கை!

11

மன்னார் மறைமாவட்ட

## புதிய குருமுதல்வராக தமிழ்நேசன் அடிகளார்



மன்னார், மார்ச் 15
மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். 11

கனேடியப் பிரதமர்

## ஜஸ்ரின் ட்ரூடோ விடைபெற்றார்!

புதிய பிரதமராக கார்னி



ஒட்டாவா, மார்ச் 15
இலங்கை அரசாங்கம் இனப்படுகொலையில் ஈடுபட்டது என்று கனடாவின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிரதமர் ட்ரூடோவின் பதவிக்காலம் நேற்று 11

## பட்டலந்த அறிக்கை; தனிக்குழு அமைப்பு!

கொழும்பு, மார்ச் 15
பட்டலந்த ஆணைக்குழு விசாரணை அறிக்கை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி 11

## பட்டலந்த விவகாரம்; ரணில் விசேட உரை!



கொழும்பு, மார்ச் 15
பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவிப்பொன்றை விடுக்கத் தயாராகி வருகின்றார் என்று 11



## கச்சதீவுத் திருவிழா நேற்று ஆரம்பம்!

இன்று திருநாள் திருப்பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 15
வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் 11



மூச்சந்தி முரளி

'பட்டலந்த அறிக்கை மாதிரி நாங்கள் பட்டுலைஞ்ச பாடுகளுக்கும் இனியாவது நீதி கிடைக்குமோ?'

கூரிய ஆயுதத்தால் குத்தி

## மூதாட்டிகள் இருவர் மூதூரில் படுகொலை!

பேர்த்தி கைது

திருகோணமலை, மார்ச் 15
மூதூர், தாஹா நகரில் உள்ள வீடொன்றில் சகோதரிகளான மூதாட்டிகள் இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட் 11

இலங்கைச் சிறையில் உள்ள

## இந்திய மீனவர்களை உடன் விடுவியுங்கள்

ஜெய்சங்கரிடம் வலியுறுத்து

புதுடெல்லி, மார்ச் 15
ஸ்ரீலங்கா கடற்படையால் கைதுசெய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய 11

## பெருமளவு கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 15
மீசாலைப் பகுதியில் பெருமளவு கஞ்சாவைக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4017
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 01 05 08 32
விசேட எழுத்து T

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1084
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 27 48 54 58

**NLB ஜய**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 043
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 7 2 6 6

**மெகா பவர்**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2123
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 24 27 59 73

**மஹஜன சம்பத**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5775
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 7 0 4 5 7 9

**தன நிதானய**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1805
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 14 44 58 62
விசேட எழுத்து J

**அத சம்பத**
திகதி 14.03.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0350
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 4 5 7 9

# அரசாங்கத்தின் விருப்பத்துக்கேற்ப தேர்தல் திகதி நிர்ணயிக்கவில்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம்

கொழும்பு, மார்ச் 15

**அரசாங்கத்தின் வழிநடத்தலுக்கு அமைய தேர்தல் பணிகளுக்கான திகதிகளை நிர்ணயிக்கவில்லை. ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே தீர்மானம் எடுக்கப்பட்டது. தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு போதுமான காலவகாசம் வழங்கப்படும்.**

இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம். தேர்தல் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல்கள் மற்றும் வேட்புமனுக்கள் மீதான முறைப்பாடுகளை ஆராய்ந்த தன் பின்னரே வாக்கெடுப்புத் திகதி அறிவிக்கப்படும். தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதுமான காலவகாசம் இல்லை என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வேட்புமனுத்தாக்கல் நிறைவு பெற்றதன் பின்னர் 35 நாள்களுக்குக் குறையாமலும், 49 நாள்களுக்கு அதிகரிக்காமலும் பிரச்சார நடவடிக்கைக்கு காலவகாசம் வழங்கப்படும். இந்தக் காலவரையறையை உள்ளடக்கியதாக வாக்கெடுப்புத் திகதி அறிவிக்கப்படும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நாடாளுமன்றமே கொள்கை ரீதியில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச்சிக்கலுக்குத் தீர்வு கண்டு சாதகமான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை முன்னெடுப்போம். மக்களின் ஜனநாயக வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு - என்றார். (ஏ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0483
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 2 0 3 8 8 2

**Super Ball DLB**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2749
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 24 46 58 74

**சனிதா DLB**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 05 58 64 78
வெற்றி வாரம் 4910

**SASIRI DLB**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0642
வெற்றி இலக்கம் 21 22 49

**லக்ன ராசி**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம் 05 17 43 62
சீட்டிழுப்பு வாரம் 4461
DLB

**KAPRUKA DLB**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கம் 15 21 30 39
வெற்றி வாரம் 1925

**அத கோடிபதி DLB**
திகதி 14.03.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 20 54 60 62
வெற்றி வாரம் 2575

# வெளிநாட்டு வேலைக்கு புதியசட்டம் விரைவில்!

கொழும்பு, மார்ச் 15

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்பவர்கள் க.பொ.த. உயர்தரம் கற்றிருக்கவேண்டுமென்ற சட்டத்தை பிரகடனப்படுத்தப்போவதாக மகளிர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

18 வயதுக்குக் குறைந்தவர்களை வெளிநாட்டு வேலைகளுக்காக குறிப்பாக வீட்டுப்பணிப்பெண்களாக அனுப்புவதைத் தடைசெய்யும் நோக்குடன் இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.


கடந்த ஆண்டு 683 சிறுமிகள் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் போலி முகவர்களால் வீட்டுப்பணிப்பெண்களாக அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# கொழும்பு மாநகரசபைக்கு பொதுச்சின்னத்தில் ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சிசபைத் தேர்தலின்போது மிகப் பிரதான சபையாகக் கருதப்படுகின்ற கொழும்பு மாநகரசபைக்கு பொதுச்சின்னத்தில் கூட்டணியாகக் களமிறங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொதுப்பட்டியலின்கீழ் போட்டியிட எதிர்பார்க்கின்றோம். இதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது. இறுதிப்பட்டியல் இன்னமும் தயாரிக்கப்படவில்லை. அதற்கமைய கொழும்பு மாநகரசபைக்கு பொதுச்சின்னத்தின் கீழ் போட்டியிடத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22,44)



# அமைச்சு பங்களாக்களை கோரும் நிறுவனங்கள்!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் உள்ள நான்கு வெளிநாட்டுத் தூதரகங்கள் தமது அலுவலகங்களை இயக்குவதற்காக அமைச்சு பங்களாக்களை வழங்க வேண்டும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

20 நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதுவரையில் அமைச்சு பங்களாக்களை கோரியுள்ளனர். பல்கலைக்கழக விடுதிகளுக்காகவும் அமைச்சு பங்களாக்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சு பங்களாக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திய குழுவின் அறிக்கை அண்மையில் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# நாமலை ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பமாம்

## முன்னாள் எம்.பி. குட்டியாராச்சி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்சவின் மகனான நாமல் ராஜபக்சவை நாட்டின் அடுத்த ஜனாதிபதி ஆக்குவதற்குரிய வேலைத்திட்டம் உள்ளூராட்சித் தேர்தல் ஊடாக ஆரம்பமாகும் என்று ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உள்ளூராட்சிசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி தயாராகிவருகின்றது. நாட்டின் அடுத்த தலைவர் நாமல் ராஜபக்ச என்ற விடயத்தில் மாற்றுக்கருத்து கிடையாது. போரை முடித்து, நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்திய தலைவர் தான் மஹிந்த ராஜபக்ச. அவரது முகாமில் அடுத்த தலைவர் நாமல்தான். நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்குரிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கை இந்தத் தேர்தல் ஊடாக ஆரம்பமாகும் - என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை விரிவுரையாளர்களின் வேதனங்களில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 15

பல்கலைக் கழக விரிவுரையாளர்களதும், கல்விசாரா ஊழியர்களதும் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று உள்ளூராட்சி வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புதிய சம்பள அதிகரிப்பின்படி ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 75 ரூபா அடிப்படைச்சம்பளம் பெறும் விரிவுரையாளர்களின் சம்பளம் 2 லட்சத்து 37 ஆயிரத்து 530 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 350 அடிப்படைச் சம்பளம் பெறும் விரிவுரையாளர்களின் சம்பளம் ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 280 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பேராசிரியர்களின் ஆராய்ச்சிக் கொடுப்பனவு 27 ஆயிரத்து 776 ரூபாவிலிருந்து 28 ஆயிரத்து 189 ரூபவாக அதிகரிக்கப்படவுள்ளது. சிரேஷ்ட விரிவுரையாளர்களின் கல்விக் கொடுப்பனவு 2 லட்சத்து 90 ஆயிரத்து 876 ரூபாவிலிருந்து 3 லட்சத்து 16 ஆயிரத்து 34 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

பேராசிரியர்களின் கல்விக் கொடுப்பனவு 2 லட்சத்து 38 ஆயிரத்து 221ரூபாவிலிருந்து 2 லட்சத்து 59 ஆயிரத்து 108 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. கல்விசாரா ஊழியர்களின் அலவன்ஸ் 46 ஆயிரத்து 800 ரூபாவிலிருந்து 65 ஆயிரத்து 93 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. கீழ்நிலை ஊழியர்களின் அலவன்ஸ் 12 ஆயிரத்து 161 ரூபாவிலிருந்து 15 ஆயிரத்து 69 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. புதிய சம்பள அதிகரிப்பின் பிரகாரம் சிரேஷ்ட பேராசிரியர்களின் சம்பளம் 5 லட்சத்து 29 ஆயிரத்து 397 ரூபாவிலிருந்து 6 லட்சத்து 19 ஆயிரத்து 860 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. பேராசிரியர்களின் சம்பளம் 4 லட்சத்து 40 ஆயிரத்து 913 ரூபாவிலிருந்து 5 லட்சத்து 15 ஆயிரத்து 844 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

# அரச வேலை மோசடி; இருவர் கைது

கொழும்பு, மார்ச் 15

அரச வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி ஐம்பது இலட்சத்து 5 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் கட்டிகல மற்றும் பந்தலங்கலப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அதில் ஒருவரை 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)

# அரகலய இழப்பீட்டு வீடுகளின் பெறுமதிக்குப் பணம் அறவீடு

கொழும்பு, மார்ச் 15

அரகலயப் போராட்டத்தின்போது சேதமாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குப் பதிலாக கட்டிகொடுக்கப்பட்ட வீடுகளுக்குரிய பெறுமதியை அறவிடத் தீர்மானித்துள்ளதாக உள்ளூராட்சி அபிவிருத்தி பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரகலயப் போராட்டத்தின் போது சேதமாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குப் பதிலாக 76 வீடுகள் கட்டப்பட்டன. இவற்றில் 26 வீடுகள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு குறைந்த பெறுமதியில் வழங்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளுக்கு உரிய பெறுமதியை அறவிடுவதற்கு அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. மிகுதியாக உள்ள 50 வீடுகளையும் அதற்குரிய பெறுமதியில் வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச- 25, 6)

# வவுனியா 4 சபைகளுக்கும் தமிழரசுக்கட்சி கட்டுப்பணம்

வவுனியா, மார்ச் 15

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழரசுக் கட்சி நேற்று வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்குப் பிரதேசசபை, வெண்கல செட்டிகுளம் பிரதேசசபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழரசு கட்சி வீட்டுச்சின்னத்தில் போட்டியிடவுள்ளது. (ச-110,18)



# ஆட்பதிவுத் திணைக்களம் இன்றும் திறந்திருக்கும்!

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டைத் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதத்தை வெளியிடுவதற்காக இன்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் உள்ளிட்ட மாகாண அலுவலகங்கள் காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சாவகச்சேரி நகரில் கார் – பட்டா விபத்து

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று கார் ஒன்றும் பட்டாரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

மஞ்சள் கடவையினூடாகப் பாடசாலை மாணவர்கள் கடக்க முற்பட்டவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற கார் நிறுத்தப்பட்டது. இந்தநிலையில் பின்னால் வேகமாகப் பயணித்த பட்டா ரக வாகனம் சடுதியாக நிறுத்தமுடியாது வேகக்கட்டுப்பாட்டை இழந்து காருடன் மோதியுள்ளது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-28)




ஆழமறியாமல் காலை விடக்கூடாதெண்ட மாதிரி காலமறியாமல் காரியம் செய்யவும் கூடாது. இப்பிடி நாள் கோள் பாக்காமல் போய் அமைச்சர் ஒருத்தர் கச்சேரியில முந்தநாள் அவமானப்பட்ட சம்பவத்தை அவையள் அமுக்கினாலும், பட்சியின்ர மூக்கில எப்பிடியோ வேர்த்திடும். இப்ப உள்ளூராட்சி எலக்சன் நடக்கப்போகுதுதானே. நடந்து முடிஞ்ச ரண்டு எலக்சனிலையும் வெண்டமாதிரி இதிலையும் எல்லா இடத்திலையும் வெல்லோனும் எண்ட வெறியில திசைகாட்டிக்காரர் தீயா வேலைசெய்யினம். ஆனால் வேட்பாளர்மாரைக் கண்டுபிடிக்கிறதுதான் பெரும் கஷ்டமாக்கிடக்காம். பார்லிமெண்ட் எலக்சனில போட்டவைமாதிரி இல்லாமல் இதுக்காவது சனத்திட்ட செல்வாக்குள்ள, ஆளுமையான ஆக்களைக் கண்டுபிடிச்சுப் போடச்சொல்லி மேலிடம் ஓர்டர் போட்டிருக்காம். இஞ்ச வடக்கில ஏற்கனவே தமிழ்த் தேசியக் கட்சியள் எண்டு தங்களைத்தாங்களே சொல்லிக்கொள்ளுறவை, ஒவ்வொரு ஊரிலையும் செல்வாக்கு உள்ளவையை தங்கட வேட்பாளர் பட்டியலுக்குள்ள போட்டிட்டினம். அதால திசைகாட்டிக்காரருக்கு ஆரைப் போடுறதெண்டு தெரியாமல் குழப்பமாம். இந்தக் குழப்பத்தில கட்டுப்பணம் கட்டாமல் இருந்திருக்கினம்.

இனியும் கட்டுப்பணம் கட்டாமல் விட்டால் சரியில்லை எண்டிட்டு, அமைச்சர் தன்ர மூண்டு எம்.பி.க்களையும் கூட்டிக்கொண்டு கச்சேரிக்கு வெளிக்கிட்டிருக்கிறார். வழக்கமா இப்பிடியான நல்லகாரியத்துக்குப் போகேக்க அமைச்சர் பளபளக்கிற நஷனல் சேர்ட்தான் போடுறவர். அண்டைக்கும் அதையே போட்டுக்கொண்டு தன்ர பரிவாரங்களோட கச்சேரியில இருக்கிற தேர்தல் திணைக்கள ஒப்பீஸுக்குப் போய், 'கட்டுப்பணம் கட்டப்போறம்' எண்டிருக்கிறார். ஆனால் அதுக்கு அங்க இருந்தவை சொன்ன பதிலைக் கேட்டதும் 'அசிங்கப்படுத்திட்டாங்கள் குமார்' எண்டு அமைச்சரே மனதுக்குள்ள வெதும்பிறமாதிரிப் போட்டுது.

'இண்டைக்கு போயா. காசு கட்டேலாது. நீங்கள் இஞ்ச வரமுதல் ஒருக்கா கேட்டிட்டு வந்திருக்கலாமே?' எண்டதுதான் அவை சொன்னபதில். ஒரு போயாநாளில கட்டுப்பணம் கட்டேலாது எண்டு அமைச்சருக்கே தெரியாமல் போட்டிது. அதுசரி, போயா நாளில எப்பிடி கச்சேரியில தேர்தல் திணைக்கள ஒப்பீஸ் திறந்திருக்கும் ?எண்டு ஆருக்கும் டவுட் வரலாம். எலக்சன் அறிவிச்சதால, இப்ப லீவு நாளிலையும் தேர்தல் திணைக்கள ஒப்பீஸ் திறக்கிறது. ஆனால் இப்பிடி கட்டுப்பணம் கட்டிறமாதிரியான சிக்கலைக் கொண்டுவரக்கூடிய வேலையள் அப்பிடி லீவு நாளில செய்யிறேலை. இதுதான் இவ்வளவுநாளும் நடைமுறை. அமைச்சர் கச்சேரிக்கு வெளிக்கிடமுதல், தேர்தல் திணைக்களத்துக்கு ஒரு போன் எடுத்துக் கேட்டிருந்தாலே, இப்பிடி அவமானப்பட வேண்டியிருந்திருக்காதே. அதைவிடப் பெரியபகிடி என்னெண்டால், கட்டுப்பணம் போயாநாளில கட்டேலாது எண்டவுடன, வெளியால வந்து மீடியாக்காரருக்கு தாங்கள் வேற ஏதோ அலுவலா வந்தமாதிரி கம்பிகட்டுற கதையள் சொல்லி, அமைச்சர் செய்த சமாளிப்புக்கேஷனுக்கு ஒஸ்கர் விருது குடுக்கலாம் கண்டியளோ.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகப் பணிகளில் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம் :** உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# டில்லி கலை இலக்கியப் பேரவையின் 2ஆவது தமிழ்க் கலை இலக்கிய மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 15

டில்லி கலை இலக்கியப் பேரவை மற்றும் இந்தியத் துணைத்தூதரகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2 ஆவது தமிழ்க் கலை இலக்கிய மாநாடு, யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக திரைப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார், முனைவர் இரா.மாது, டில்லி கலை இலக்கியப்பேரவையின் தலைவர் கே.குமரன், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையகத்தின் உறுப்பினர் மருத்துவர் ஜெ.சரண்யா ஆகியோருடன் உலகளாவிய தமிழ்ச் சான்றோர்களும் ஆன்றோர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பரத நாட்டியம், கவியரங்கம், சிறப்பரங்கம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம், நூல் வெளியீடு, நாடகம், இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்வுகள் மாநாட்டை அலங்கரிக்கவுள்ளன. ஆர்வலர்களைக் கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச- 25)

## ஆசிரிய கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 15

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை நிகழ்வு திருவள்ளுவர் சிலை முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், தமிழ்மன்றக் காப்பாளரும் விரிவுரையாளருமான வேல் நந்தகுமார் மற்றும் விரிவுரையாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச- 25, 9)



## பாரதி முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

நுணாவில் கிழக்கு பாரதி பாலர் முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளி முகாமைக்குழுத் தலைவர் வி.சுபாசினி தலைமையில் அமிர்தாம்பிகை வித்தியாலய மைதானத்தில் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக சட்டத்தரணி கே.சயந்தன், சிறப்பு அதிதியாக அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் திருமதி த.வசந்தமாறன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 28)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

உரும்பிராய் - பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. காலை 6 மணிமுதல் ஸ்ரீ மஹாகணபதிப் பூஜைகள் நடைபெறும்.

கும்பாபிஷேகப் பூஜைகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிமுதல் அன்னதானம் வழங்கல் இடம்பெறும்.

பக்த அடியார்கள் அனைவரையும் வழிபாடுகளில் கலந்துகொண்டு கணபதியின் அருள்பெறுமாறும், ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்குத் தங்களால் முடிந்த நிதியுதவியை வழங்குமாறும் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக் குருக்கள் கேட்டுள்ளார். (ச- 25)

## 'ஆயுசு 100' யோகா யாழில் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

'ஆயுசு 100' பரிபூரண நல்வாழ்வு மையத்தின் ஏற்பாட்டில், நோய் தீர்க்கும் யோகாசனப் பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவுகள் தொடர்பாக விளக்கும் செயலமர்வு, யாழ். கொசி விடுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆயுசு 100 ஆயுர்வேத நிபுணர் குழுவைச் சேர்ந்த, சித்த ஆயுள்வேத மருத்துவர் ஜெ.இரத்னலகி செயலமர்வை சிறப்பாக நடத்தினார். நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் முன்னணி வங்கி முகாமையாளர்கள், பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள், முன்னணி அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள், இளைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ச-25)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




**நாளொரு நல்வார்த்தை**

எரிகின்ற நெருப்பை நீரினால் அணைப்பதுபோல மனதில் எழுகின்ற கோபத்தைப் புத்தியினால் அடக்குபவன் மகாத்மா.

– ஸ்ரீராமகிருஷ்ணர் –

## கண்துடைப்பா? விடுவிப்பா?

‘அச்சுவேலி - வயாவிளான் வீதியின் ஒரு பகுதியை விடுவித்திருகின்றோம். விரைவில் படையினரின் வசமுள்ள காணிகள் தொடர்பில் பரிசீலனையில் ஈடுபட்டு அடுத்தகட்ட விடுவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்’ என்று அறிவித்திருக்கின்றார் அமைச்சர் கொடித்துவக்கு. வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வீதியின் ஒரு பகுதியை அநுர அரசாங்கம் விடுவித்தது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு விடுவிப்பும் -ஒவ்வொரு முன்னேற்றமும் கொண்டாடப்பட வேண்டியதே. எனவே, இந்த விடுவிப்பு வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், மறுமுனையில் இதுவொரு கண்துடைப்பு என்பதையும் அழுத்தமாகப் பதிவுசெய்யவேண்டிய அவசியம் இருக்கவே செய்கின்றது.

இரண்டு கிலோமீற்றருக்கும் மேற்பட்ட தூரமுடைய இந்த வீதியில் வெறும் ஒரு கிலோமீற்றர் பகுதியே அநுர அரசாங்கம் பதவியேற்றவுடன் திறந்து விடப்பட்டது. மிகுதிப்பகுதி இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. சுருங்கக்கூறினால், அந்த வீதியால் பயணிக்கும் மக்களுக்கு 10 நிமிடம் மீதப்படுத்தப்படுகின்றது , அவ்வளவே. அத்துடன், இந்த வீதி இதற்கு முன்னர் பயன்படுத்தப்படாத ஒன்றல்ல. ஆதலால், இதையொரு பெரும் விடுவிப்பு என்று கூறிக்கொள்ள முடியாது. குறைந்த பட்சம் அந்த வீதியை முற்றாக விடுவித்துவிட்டேனும் அரசாங்கம் மார்தட்டிக் கொண்டால் பரவாயில்லை. ஒரு சந்திக்கும், இன்னொரு சந்திக்கும் இடைப்பட்ட குறிப்பிட்ட தூரத்தை விடுவித்துவிட்டு, ஏதோ ஒருபோதும் நடக்கமுடியாத விடயத்தை நடத்திக்காட்டியதைப் போன்று அரசாங்கம் பேசுவது சுத்த மடமைத்தனம்.

அத்துடன், தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில், நீண்டகாலக் கோரிக்கைகளின் பின்னர் அந்த வீதியில் ஒரு பகுதியே விடுவிக்கப்படுகின்றது. அந்த மிகச்சிறிய விடுவிப்புக்கே இத்தனை ஆர்ப்பரிப்புகள் என்றால், மிகுதிப் பகுதியை விடுவிக்க இன்னும் சில தசாப்தங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படுமோ? என்ற அச்சமும் தற்போது மேலிடுகின்றது. எனவே, முழுமையான விடுவிப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி மாளிகைக்கு அருகாக இருந்த வீதிகளையே பாதுகாப்புக் காரணங்களைக் கூறி மறித்து வைத்திருக்காமல் திறந்துவிடுமாறு உத்தரவிட்ட அவர், அச்சுவேலி -வயாவிளான் வீதியின் முழுமையான விடுவிப்புக்கு அனுக்கிரகம் பண்ணுவதென்பதும், வலி. வடக்கில் தேவையற்று சுரண்டப்பட்டிருக்கும் காணிகளை விடுவிப்பதும் ஒன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆதலால் ஒரு முற்றான விடுவிப்பை தமிழர்கள் அவரிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடக்கம், மாதவனை மேய்ச்சல்தரை வரை விடுவிப்புகளும், பிரச்சினைகளும் தீராத்தலைவலியாகத் தொடர்கின்றன. இவற்றுக்கும் தேசிய மக்கள் சக்தியினர் தீர்வைக் காணுவார்களாக இருந்தால், தமது பெருமைகள் தொடர்பில் அவர்கள் பேசவேண்டியதில்லை. செயலே சொல்லை விடச் சிறந்த ஆயுதம். எனவே தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளை அவர்களே ஊரெங்கும் பறைதட்டாமல், அவர்களின் செயல்கள் பரப்புரை செய்வதே மாற்றமாக இருக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## பெண்களைப் பாதுகாக்க புதிதாக சட்டங்கள் வரும்



தொழில் பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

**இலங்கையில் பணியிடங்களில் பெண்களைப் பாதுகாக்கவும் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை இல்லாதொழிக்கவும் சட்டங்களை வலுப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை மற்றும் துன்புறுத்தல்களை இல்லாதொழிப்பது தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பு உடன்படிக்கையை அங்கீகரிக்க எதிர்பார்த்துள்ளோம். இந்த மாநாட்டு உடன்படிக்கையை இலங்கை இன்னும் அங்கீகரிக்கவில்லையென்றாலும், இந்த உடன்படிக்கையை அங்கீகரிப்பது தொடர்பாகப் பரிசீலித்து அது தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் .
நாங்கள் இதை ஒரு சட்டமாக அறிமுகப்படுத்தி, பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம். பெண்கள் எதிர்கொள்ளும் மன அல்லது உடல் ரீதியான அனைத்து வகையான துஷ்பிரயோகங்களையும் தடுப்போம்- என்றார். (எ-இ)

## கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு; 3 பொலிஸ் குழுகளமிறக்கம்

கொழும்பு, மார்ச் 15
கம்பஹா - வெலிவேரிய அரலியகஸ்தேக சந்தியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தற்போது மூன்று பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன.
காரில் பயணித்த ஒருவரை குறிவைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் பிஸ்டல் வகை துப்பாக்கியைப் பயன்படுத்தி தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## விலகினார் நளீம் எம்.பி.

கொழும்பு, மார்ச் 15
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மது சாலி நளீம் பதவி விலகியுள்ளார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சாலி நளீம் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், அவரது பதவி விலகலானது, 2025ஆம் ஆண்டின் முதல் நாடாளுமன்ற பதவி விலகலாகப் பதிவாகியுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டிவிடுவதற்காக அவர் பதவி விலகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

மருத்துவர் துஷ்பிரயோகம்

## சந்தேகநபருக்கு தடுப்புக்காவல்

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை 48 மணிநேரம் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## காற்றின் தரம் யாழில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 15
யாழ்ப்பாணத்தில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற தரநிலையில் காணப்படுவதாக மோட்டார் போக்குவரத்துத்துறையின் வாகன உமிழ்வு சோதனை அறக்கட்டளை தெரிவித்துள்ளது. கொழும்பு 7, களுத்துறை, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகியவை நேற்று மிதமான காற்றின் தர அளவைப் பதிவுசெய்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



**நாளை** ஞாயிற்றுக்கிழமை -பங்குனி - 02


16.03.2025

சுபநேரம் : 09.20 - 10.50
ராகுகாலம் : 04.50 - 06.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 04 . 1951



மறைவு
10 . 03 . 2025

## பொன்னையா கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியர் - குருநாகல் மதீனா மகா வித்தியாலயம்.
இளைப்பாறிய உப அதிபர் - மு/ மல்லாவி மத்திய கல்லூரி. இளைப்பாறிய ஆசிரியர் -
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி)

யாழ் புத்தூர் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தசாமி கடந்த 10.03.2025 திங்கட்கிழமை ஒன்றாரியோ கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - இராசம்மா தம்பதியின் அருமை மருமகனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி அவர்களின் ஆருயிர்க்கணவரும், சேயோனின் அன்புத்தந்தையும், நிருமதியின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணேஸ்வரன், இரஞ்சிதராணி, விமலினிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும், சகுந்தலாவின் உடன்பிறவாச் சகோதரரும், தேவசேனா, குகனேசன், இரத்னவேல், சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், காலஞ்சென்ற இராஜதிலகம், காலஞ்சென்ற சித்திராலட்சுமி, சுரேந்திரநாதன், பாஸ்கரன், விக்கினேஸ்வரன், சசிலா, குமுதினி, முகுந்தன், வாகினி, மாதினி, ஜனனி, துஷியந்தன் ஆகியோரின் அருமை மைத்துனரும், குமாரசுப்பிரமணியம், பராசக்தி, தனலட்சுமி, மங்கையர்க்கரசி, ஆகியோரின் அன்புச் சகலரும், சாரங்கா, பவஹாரிணி, நாதஸ்வரூபிணி, வித்தியானந்தி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், ஹம்ஷாஜினி, ஸ்ரீஜெயந்தன், தனன்சன், ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீஷியாமளன், ஸ்ரீதுவராகன், கீர்த்தனா, நிரோஷா, சியாமசுந்தரன், தாரிணி, பாமினி, அபிராமி, கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 'Chapel Ridge Funeral Home' 8911 Woodbine Ave, Markham, ONTARIO, L3R 5G1 எனுமிடத்தில் 16-03-2025 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9:30 மணி முதல் 11:30 மணி வரை (கனடா நேரம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 11:30 மணி முதல் 1:00 மணி வரை நடைபெற்று பிற்பகல் 1:30 மணியளவில் North Toronto Crematorium ல் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
+1437 230 5526


தகவல்:
சேயோன் (மகன்)

cr 44570 (N-1)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 18.02.2025
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## தம்பிராசா சண்முகலிங்கம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (18.03.2025) செவ்வாய்க் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 20.03.2025 வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத்தலைவர் எம்மையெல்லாம் விட்டு இறையடி சேர்ந்த நேரத்தில் எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிக்கரம் நீட்டிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

074 216 3926, 077 886 7258,
077 301 3766

சியாமளா மில் லேன்,
மீசாலை வடக்கு,
மீசாலை

# காணி வாடகைக்கு உண்டு

யாழ்நகர் ஸ்ரான்லி வீதியில்
3 ½ பரப்புக் காணி
வாடகைக்கு உண்டு.

076 565 2122

(cs 27031) (N-1)

# Invitation for Bids (IFB-2025/02)

## Department of Irrigation, Northern Provincial Council.

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG, Recurrent நிதி மூலங்களின் 11 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக் கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 13.03.2025 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 2ல் பார்வையிடவும்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

(CR/44573) J-1

# தடுப்புக்காவல்

ஐஸ்போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் 5 கிராம் 270 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் விசேட அதிரடிப்படையினரால்குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-28)

# மரண அறிவித்தல்

பிறப்பு
01.07.1942



இறப்பு
14.03.2025

## அருட்சகோதரி மக்டலின் சவிரிமுத்து

(திருச்சிலுவைக் கன்னியர் சபை)

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்தவரும், அம்பிட்டிய கண்டியைச் சொந்த இடமாகவும் கொண்ட அருட்சகோதரி மக்டலின் சவிரிமுத்து நேற்று (14.03.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அருட்சகோதரியின் இறுதி நல்லடக்கத் திருப்பலியும் ஆராதனையும் யாழ் ஆயர் தலைமையில் இன்று (15.03.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவைக் கன்னியர் மட சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். மரியன்னை பேராலய மறுவாழ்வு முற்றத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருச்சிலுவைக் கன்னியர் மடம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 57738) (N.1)

தகவல்:
அருட்சகோதரி பவுலினா மனப்பு
மாகாணத் தலைவி

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 • 10 • 1944



மறைவு
15 • 03 • 2024

## N.C. எல்மோ ஆனந்தராஜா

(ஓய்வுபெற்ற வனபரிபாலகரும்
U.N.D.P. மனிதநேய மிதிவெடி அகற்றும் உத்தியோகத்தரும்)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும் கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்.

125, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.57716) (N -1)

மனைவி, மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 327 6482, 077 303 9641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று இடம்பெறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# கச்சதீவுப் பெருவிழா தவக்காலத்தில் ஓர் ஒப்பற்ற பயணம்!

பாக்கியநாதர் டிகால்
ஆசிரியர்
தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம்

சுமார் 285 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட கச்சதீவு பற்றிய வரலாற்றினை நோக்கின்ற போது இத்தீவானது நெடுந்தீவின் தென்மேற்கே 12 கிலோமீற்றர் தூரத்திலும் இந்தியாவின் இராமேஸ்வரத்திருந்து வடகிழக்கே சுமார் 17.7 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. இத்தீவினை கச்சான்தீவு, வாலித்தீவு, குஞ்சாட்டி தீவு என்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு.

கச்சதீவின் புவிசார் அமைப்பு

இத்தீவின் கிழக்கே முருங்கைக்கற்களையும் , மணற்தரையையும் மேற்குக் கரையில் சிறுசிறு மணிவுருவமான கற்களைக்கொண்ட கடற்கரையையும் தென் மற்றும் தென்கிழக்கு கடற்கரையில் கற்பாதைகளையும் காணலாம். மத்திய பகுதியில் ஆங்கிலேயர் காலத்து சிதைவடைந்த கலங்கரை விளக்கின் கட்டிட இடிபாடுகளும் மண்மேடுகளும் காணப்படுகின்றன. கண்டல் மற்றும் வறள்நிலத் தாவரங்கள் காணப்படுவதுடன் மரங்கள் குட்டையாகவும் வளைந்தும் காணப்படும். அவை இங்குவரும் திருப்பயணிகள் விடுதி அமைக்க மிகவும் அனுகூலமளிக்கின்றன. அத்தோடு அவரை இன குடும்பத் தாவரங்களும், பனைகளும், தென்னைகளும் வளர்ந்து விருட்சமாக காணப்படுகின்றன. இந்தியாவின் தென்முனையிலுள்ள வார்ஜ் கண்ட மேடையும் இலங்கைக் குடாநாட்டின் வடபகுதியிலுள்ள பீட்று கண்ட மேடையும் இணைகின்ற நீர்ப்பரப்பில் கச்சதீவு அமைந்திருப்பதுடன் பவளப் பாறைகள் கடலடித் தரைமேடைகள் மற்றும் கண்ட மேடைகள் காணப்படுகின்றன. இங்கு இறால், சங்குகள், நண்டு போன்றவற்றின் வளமும் மேலோங்கி காணப்படவதுடன் மீனவர்களின் படகுகள் மற்றும் உபகரணங்களை இயற்கைச்சீற்றத்தின் போது பாதுகாக்கும் இடமாகவும் கச்சதீவு காணப்படுகிறது. இலங்கை இந்திய மீனவர்கள் தமது வலைகளை பழுதுபார்க்கவும் மீன்களை பதப்படுத்துவதற்கும் தமது ஓய்வு கொள்ளும் இடமாகவும் கச்சதீவை பயன்படுத்தி வந்தனர்.

கச்சதீவில் புனித அந்தோனியார் திருச்சொரூப வரலாறு

கி.பி 1818 ஆண்டு ஆவணி மாத இறுதிப்பகுதியில் நெடுந்தீவு தூய யாகப்பர் ஆலயப் பங்கினைச் சேர்ந்த உறவினர்களான அந்தோனி, பிரான்சிஸ், குப்பசாமி ஆகிய மூவரும் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது வீசிய கடுங்காற்று, மழை மற்றும் நீரோட்டம் காரணமாக நெடுந்தீவுக் கடற்பிராந்தியத்துக்கு அப்பால் தோணியுடன் இழுத்துச்செல்லப்பட்டனர். தாங்கள் உயிர் பிழைத்தால் புனித அந்தோனியாருக்கு திருட்சொரூபம் வாங்கி வைப்பதாக வேண்டுதல் செய்தனர். பலமணித்தியாலங்களுக்கு பின்னர் அவர்கள் ஒரு சிறு தீவில் கரையொதுங்கி சில தினங்கள் அங்கு கிடைக்கும் மீன்கள், அவரையினக்காய்கள் போன்றவற்றை பக்குவம் பண்ணாமல் புசித்து உயிர்வாழ்ந்தனர். தம்மை உயிருடன் மீட்ட அந்தோனியாரை அந்தத்தீவிலேயே வணங்க ஏற்பாடு செய்தனர். சுண்ணச்சுதையால் சிறுதூணில் வடிவமைக்கப்பட்ட திருச்சொரூபம் ஆசீர்வதித்து வைக்கப்பட்டு, தென்னங்கிற்றால் நிழற்குடை வேயப்பட்டது. அதன் பின்னரே வருடா வருடம் கச்சதீவு சென்று வழிபட்டு வரும் வழக்கம் ஆண்டு தோறும் இடம் பெறலாயின.

**ஆலய அமைப்பும் பின்னணியும்**

1902 ஆம் ஆண்டுக்கு முன்னர் நெடுந்தீவானது ஊர்காவற்றுறை ஆலய கத்தோலிக்க பங்குடன் இணைக்கப்பட்டிருந்தது. 1902 ஆம் ஆண்டு புங்குடுதீவு, எழுவைதீவு



என்பன நெடுந்தீவுடன் இணைக்கப்பட்டு நெடுந்தீவுப் பங்கு என அழைக்கப்பட்டது. 1908 ஆம் ஆண்டே நெடுந்தீவு தனிப்பங்காக மாறியது. 1907 ஆம் ஆண்டில் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த யோசப் சின்னத்துரை ஆசிரியரும் அவரது தந்தையும் "மரியபுரவி" எனும் வத்தையில் சில தளபாடங்கள் மற்றும் கட்டிடப்பொருள்களை கச்சதீவுக்கு கொண்டு சென்று சுமார் 25 அடி நீளம் கொண்ட ஆலயக் கட்டிடம் அமைத்தனர். 1917ஆம் ஆண்டில் வண.வாஸ் அடிகளார் புதிய ஆலயம் அமைக்க அடிக்கல் நாட்டினர். அதற்கு பிற்பட்ட காலப்பகுதிகளில் அவ்வப்போது நெடுந்தீவுப் பங்கில் பணியாற்றிய குருக்களின் முயற்சியினால் ஆலய புனரமைப்புகள் இடம்பெற்றன. தற்போது அமைக்கப்படவுள்ள புதிய ஆலயம் இலங்கை அரசினதும் யாழ்.மறைமாவட்ட மேற்பார்வையிலும் நெடுந்தீவுப் பங்குத்தந்தையின் பங்களிப்புடன் கட்டப்பட்டது. 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசத்தினால் திறந்துவைக்கப்பட்டது.

ஆலய நிர்வகிப்பு

கடந்த 1980 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையும் கச்சதீவின் புனித அந்தோனியார் ஆலயம் அமைக்கவும், வழிபடவும் மூலக் காரணமாக அமைந்த அந்தோனியார் குடும்பத்தினரே தொடர்ந்தும் சங்கிஸ்தானாக இருந்து வந்தனர். அதேபோல் மூப்பர்களாகவும் முன்னர் தூய யாகப்பர் பங்கினைச் சார்ந்தவர்களே பங்காற்றி வந்தனர். இலங்கை திருச்சபையின் பதிவுகளின்படி 1913 ஆம் ஆண்டு கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது தவக்கால யாத்திரைத்தலமாக அங்கீகரிக்கப்பட்டது. வருடந்தோறும் தவக்காலத்தின் 3 ஆம் ஞாயிறு சில வேளைகளில் 2 ஆம் ஞாயிறு கச்சதீவு அந்தோனியார் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. முன்னர் ஒருவாரம் நீடித்த இவ்விழா இன்றைய காலகட்டத்தில் இரண்டு, மூன்று தினங்களாக மட்டுப்படுத்தப்பட்டு திருவிழா கொண்டாடப்படுகின்றது.

**இலங்கை-இந்திய மக்களின் நடுமையம்**

கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்காக இலங்கைஇந்திய மக்கள் வருகை தந்து திருவிழாவில் கலந்து சிறப்பிப்பது வரவேற்கத்தக்கது. கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவானது, விவசாயப் பின்னணியில் யூதமக்களின் நீண்டகால அறுவடை மற்றும் கூடாரத்திருவிழா ஒத்திருப்பதாக அருட்பணி பற்றிக் ஞானப்பிரகாசம் அ.ம.தி அடிகளார் குறிப்பிட்டுள்ளார். கச்சதீவு திருவிழாவுக்காக வருகை தரும் இந்திய இலங்கை மீனவர்களும் மக்களும் புரிந்துணர்வுடனும் தவக்கால யாத்திரைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதும் சிறப்புமிக்கதாகும்.


நீண்ட வரலாற்று கிறிஸ்தவ பாரம்பரியத்தை கொண்டமைந்த கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா இலங்கைஇந்தியா மக்களுக்கு ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமைய வேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் அக்கறையோடு ஆதரவு தந்து குரல்கொடுக்கத் தமிழகத் தலைவர்கள் முன்வரவும், எல்லை தாண்டிய மீனவர் பிரச்சினைகளுக்கு இத்திருவிழாகக் காலங்களில் ஒரு நிரந்தரத் தீர்வை எட்டக்கூடிய நிலையை இருநாட்டு அரசுகளும் உருவாக்க வேண்டும். யாழ்.மறைமாவட்ட நெடுந்தீவுப் பங்கு இணைந்து கருத்தொருமித்து ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுவதற்கு முன்வரவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 01.12.1950 | 13.03.2025 |



## சபாரத்தினம் மகேந்திரன்

(முன்னை நாள் வர்த்தகர் Jasmine Stores உரிமையாளர்)

புங்குடுதீவு 2 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமன் காட்டை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட முன்னை நாள் வர்த்தகர் Jasmine Stores உரிமையாளர் சபாரத்தினம் மகேந்திரன் நேற்றுமுன்தினம் (13.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான துரைச்சாமி - கனகமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி (சாரதா) அவர்களின் அன்புக் கணவரும், திருச்செல்வம் (ஓய்வுநிலை இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர்), மங்கயற்கரசி (கனடா), கௌசலாதேவி (சுவிஸ்), இரஞ்சிதமலர், கேதாரகௌரி (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), தயாபரன் (லண்டன்), திருவருட்செல்வி (லண்டன்), சதானந்தன் (மருந்தாளர் - பிராந்திய மருந்துக் களஞ்சியம் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிலோமினா (ஆயுள்வேத வைத்தியர் - ஆலடி உடையார்கட்டு), காலஞ் சென்ற சுப்பரமணியம் மற்றும் விக்னராஜா (சுவிஸ்), ஸ்ரீதரன், சோதிராஜா (லண்டன்), தேவமனோகரி (லண்டன்), சரஸ்வதி (சாந்தி - லண்டன்), மேனகா (ஆசிரியை - வவுனியா நெடுங்குளம் கலைமகள் மகாவித்தியால யம்), மனோன்மணி, காலஞ்சென்றவர்களான சிவகுமாரன், கண்ணன் மற்றும் சிவபாலன் (காந்தி - லண்டன்), சிவலிங்கம் (ஆனந்தி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 6 / 22, 2 ம் ஒழுங்கை,கோவில் வீதி, குருமன் காட்டில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
சபா. திருச்செல்வம் - 077 775 2566
சபா. சதானந்தன் - 071 855 6633

தகவல்:
குடும்பத்தினர்.

(CS29087) N-1

# பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு ஆண்கள் இல்லத்திற்கு முகாமையாளர், ஆண் பணியாளர்கள், தகவல் தொழில்நுட்பம் (கணினி) கற்பிக்கும் ஆசிரியர் தேவையாக உள்ளது.

### முகாமையாளருக்கான தகைமைகள்

1. வயதெல்லை 25 – 55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்
3. துறைசார் பணியில் முன் அனுபவம் அல்லது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருத்தல்.
4. Child Care NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்

சம்பள அளவுத்திட்டம் -
(36585 + 10x660+11x755+15x930 = 65440/=)
தற்போது-36585+6500=43085/=(EPF,ETFபங்களிப்பிற்கு உட்படுத்தப்படும்)

### ❖ பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்

1. வயதெல்லை 25 – 55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்
3. க.பொ.த உயர்தரம் அல்லது அதற்கு மேலான கல்வித்தகைமை
4. Child Care NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்

சம்பள அளவுத்திட்டம் :
(31490 + 10x445+11x660+10x730 +5x750 = 54250/=)
தற்போது 31490+6500= 37990/=(EPF, ETF பங்களிப்பிற்கு உட்படுத்தப்படும்)

### தகவல் தொழில்நுட்ப ஆசிரியருக்கான தகைமைகள்

1. வயதெல்லை 25 – 55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
3. தங்கியிருந்து கற்பிக்க விரும்புவோர் அல்லது பகுதி நேர ஆசிரியராக கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்
4. கணினி துறையில் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பினை பெற்றிருத்தல்

**குறிப்பு : உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்**

குறித்த பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் எதிர்வரும் 23.03.2025இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.


தொடர்பு முகவரி :
ச.மோகனபவன்

தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி - 0214923118 / 0773240950

cr.44571 (N-1)

# 15ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 08.02.1923 | 14.03.2010 |



## அமரர் சவரிமுத்து தேவசகாயம்

ஊர் போற்ற நாம் வாழ
அடியெடுத்துக் கொடுத்த தந்தையே
உம்மை எமக்கு தந்தையாகத் தந்த
இறைவனுக்கு பலகோடி நன்றிகள்
என்றும் உம்மை நாம் மறவோம் !
எல்லாப் புகழும் இறைவனுக்கே !
அல்லேலூயா

இல. 28, றக்கா வீதி,
சுண்டிக்குளி.

என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், [illegible]
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.

(CS/5477742) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 28.08.1964 | 13.02.2025 |



எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த 13.02.2025
வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் செல்வமலர் சிவகுமாரன்

திதி : துதியை

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (15.03.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவையொட்டி நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலமும் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணேசன் சென்றர்
[illegible] முன்பாக,
கே.கே.எஸ் வீதி, இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்
077 991 7533
077 612 8424

(CS/57745) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹைஏஸ்' மோதி முதியவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வீதியால் சென்றுகொண்டிருந்த முதியவர் ஒருவர் மீது ஹைஏஸ் வாகனம் மோதியதில் அவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏ-9 பிரதான வீதியில் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 64 வயதுடைய பாலசுப்பிரமணியம் என்பவரே விபத்தில் காயமடைந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய ஹைஏஸ் சாரதியை கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சு-33-131)


## வேலையாட்கள் தேவை

வெல்டர்-3000/=
மேசன் உதவியாளர்-2500/=
மேசன்-3000/=
தொடர்புகொள்ளும் நேரம்
காலை-8.30- மாலை 5.00 (cs 57740)
0777 245 399

## வேலையாட்கள் தேவை

1. தொழிநுட்ப உத்தியோகத்தர் ( TO )
HND or NCT-civil
2. உதவி தொழிநுட்ப உத்தியோகத்தர். (TA)
3. கணிய அளவையியலாளர். (QS)
HND or NCT QS
4. உதவி கணிய அளவையியலாளர். (AQS)

➤ சுயவிபரக்கோவையை whatsapp / email மூலம் அனுப்பிவைக்கவும்.
(cs 2716 (S)
Email - starbuilders2025@gmail.com
TP - 077 724 5399 யாழ்ப்பாணம்.


# ஓட்டோவால் வீழ்ந்த மூதாட்டி படுகாயம்

முச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்த மூதாட்டி முச்சக்கரவண்டியிலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த 79 வயதுடைய மூதாட்டியே காயமடைந்தவராவார். (சு-33-131)


## வேலை ஆட்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபலியமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன்தேவை. மேலும் கணினி அனுபவம் உள்ள பில் கிளாக் இருபாலாரும் விரும்பத்தக்கது. (cr.4454) (N-1)
077 748 8093


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05.12.1938 — மறைவு 15.03.2022

### அமரர் இராசரத்தினம் முத்தம்மா

திதி: மாசிமாத வளர்பிறை திரயோதசி
11.03.2025


ஆண்டு மூன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் கவலை
ஆனாலும் உங்கள் நினைவோடு
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கருங்காலி காரைநகர். (cs.57735) (2.6)
என்றும் பசுமை நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## தாமதம்!

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் இருவரையும் மீட்பதற்காக விண்ணில் செலுத்தப்படவிருந்த விண்கலம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தாமதப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 01.03.2025 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் காசிலிங்கம் பாலச்சந்திரன்

திதி : வளர்பிறை பிரதமை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.03.2025) சனிக்கிழமை காலை 08.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
076 272 7734
0044 754 383 7830

இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (CS/57717).J-1.

## கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்

தோற்றம் 07 . 12 . 1996



மறைவு 14 . 03 . 2025

### சகோதரன் ஜீவரட்சகன் மதுசிகன்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சகோதரன் ஜீவரட்சகன் மதுசிகன் அவர்கள் நேற்று (14.03.2025) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜீவரட்சகன் மற்றும் ஜோஜ் தர்ஷினி தம்பதியின் புதல்வரும், சுதர்சிகா (Emma - save a life NGO ), ஜெருசிகன் (Jaffna Royal Cashews Cashier), கனிசிகன் (மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3rd Mile Post K.K.S Road,
கொக்குவில், யாழ்ப்பாணம். (CS/57743) J-1

தகவல்: தாயார்
077 982 9044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப்புள்ளிகள்!

கொழும்பு, மார்ச் 15

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 6ஆம் தரத்துக்கு மாணவர்களை இணைப்பதற்கான பாடசாலை வெட்டுப்புள்ளிகள் கல்வி அமைச்சால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வெட்டுப்புள்ளிகளைப் பெற்றிருந்தும் பாடசாலைகளில் இடம் கிடைக்காத மற்றும் பிற நியாயமான காரணங்களுக்காக தங்களுக்கான பாடசாலையை மாற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்காலத்தில் இணையவழி ஊடாக மேன்முறையீடு செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு 149 புள்ளிகளும், வவுனியா சைவப் பிரகாச மகளிர் பாடசாலைக்கு 139 புள்ளிகளும், சாவகச்சேரி மத்திய கல்லூரிக்கு 139 புள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கனடாவின் நீதி அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி நியமனம்




**ஒட்டாவா, மார்ச் 15**

**கனடாவின் நீதி அமைச்சராக ஈழத் தமிழரான ஹரி ஆனந்த சங்கரி நியமிக்கப்பட்டுள்ளார்.**

கனடாவின் பிரதமராகச் செயற்பட்ட ட்ரூடோ நேற்றுடன் பதவியில் இருந்து விலகியுள்ளார். புதிய பிரதமராக கார்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையிலேயே ட்ரூடோவின் அரசாங்கத்தில் பூர்வகுடிகள் மற்றும் சுதேசிகளுக்கான அமைச்சராக இருந்த ஹரி ஆனந்த சங்கரி, கார்னியின் அமைச்சரவையில் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-இ)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.02.2025 வியாழக்கிழமை அன்று சிவபதப்பேறு அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

## ஆறுமுகம் சந்திரசேகரம்

**(விஷ்ணுகரன்ஸ் பான்சி உரிமையாளர், AVP சந்திரன்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 13.03.2025 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் காரைநகர் ஆலங்கன்று தீர்த்தக் கரையில் நடைபெற்றதுடன், வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.03.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**குடும்பத்தினர்**
**(விஷ்ணுகரன்ஸ் பான்சி)**
021 224 1290
077 959 2377

**இல.84/13, குட்டியாண்டி வளவு, ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.**

(CS/2723) J-1

# வனவிலங்குகள் வவுனியாவில் கணக்கெடுப்பு

வவுனியா, மார்ச் 15 நாடுபூராகவும் நடைபெறவுள்ள பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வனவிலங்குகளின் கணக்கெடுப்பு வவுனியால் இன்றுமுதல் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருங்குரங்கு, குரங்கு, மரஅணில், மயில் என்பவற்றை கணக்கெடுப்பதற்கான வகையில் படிவம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,18)

# குளவி கொட்டி பெண் பாதிப்பு



சாவகச்சேரி, மார்ச் 15

விறகு எடுப்பதற்குச் சென்ற பெண்ணொருவர்மீது கருங்குளவி கொட்டியதில் அவர் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதடி நுணாவில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (ச-33-131)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1948



மறைவு 14 . 03 . 2025

## நிமலாம்பிகை யோகேஸ்வரன்

ஏழாலை தெற்கு களவாவோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நிமலாம்பிகை யோகேஸ்வரன் அவர்கள் நேற்று (14.03.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் யோகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா-அன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சுசிலாதேவி (Nurse J/Teaching Hospital) மற்றும் சுபத்திராதேவி, அனுராதா (Retired Teacher) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-இராசம்மா தம்பதிகளின் மருமகளும் ஜெயந்தினி, ஜெனீவன் (Akee Phone Shop Jaffna), ஜெகந்தன் (Management Development Training Unit Kilinochi), ஜெயாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுறேந்திரராஜ் (Acx Phone Shop Jafna), கஜானா, ருஷாந்தினி (Management Service Oficer Zonal Department Valikamana) நாகசொருபன் (Maniyam Stores Gale) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மறீன் அபிஷாயினி, ஜொயல் ஆகேஷ் மிஷேல் ஆயோஜனா, கர்னிகன், அகீசன், தஸ்வின் மிதுஷாயினி, அருனிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**களவாவோடை**
**ஏழாலை தெற்கு ஏழாலை**

(CS 2726) V-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
077 622 1971, 077 152 4880

# கரைச்சி பிரதேசசபையின் கேள்வி கோரல் நிறுத்தம்

கிளிநொச்சி, மார்ச் 15

கரைச்சி பிரதேசசபையால் புதிதாகக் கட்டப்பட்ட கடைகளுக்கு கோரப்பட்ட கேள்விகோரலை இடைநிறுத்தி வைக்குமாறு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட குறித்த கடைத்தொகுதிகள் போர்க் காலத்துக்கு முன்னர் கடைகளை நடத்தியவர்களுக்கும், தேவைப்பாடு உடையவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் என்று முன்னதாக வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது அவ்வாறு வழங்காமல் கேள்விகோரல் மூலம் கடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், பிரதேச வாசிகளும், போர்க் காலத்தின் போது கடைகளை இழந்தவர்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனால் எழுத்தாணை மனுவொன்று கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே, குறித்த கேள்விகோரலை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-113)

# மரண அறிவித்தல்

மண்மகிழ 13 . 05 . 1973



கண் நெகிழ 09 . 03 . 2025

## பொன்னுத்துரை சுதாகரன்

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டன் Northolt ஐ. வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுதாகரன் அவர்கள் கடந்த 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற உப அதிபர்) - செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகநாதன் (ஓய்வு பெற்ற உப அதிபர்) - கமலவேணி தம்பதியின் அன்பு மருமகனும், அமுதவேணியின் (அமுதா) அன்புக் கணவரும், சாரபி, நித்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயராணி, பாஸ்கரன், சுபாஸ்கரன், திவாகரன் கருணாகரன் ஜெயகுமாரி, ஜங்கரன், சிவகரன், ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதிவதனன், கலைவாணி, மைதிலி, திருக்குமரன், துர்க்காயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற Dr.சொர்ணலிங்கம் மற்றும் மனோகரி, வாசுகி (சுமதி) ஜெயந்தி, தயாவதி, மனோகரன், கேமாவதி, அனுபாமா, சச்சிதானந்தன் (சச்சி), தர்சிகா, சிவபாலசுந்தர், திவியா, சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை பிரித்தானியா லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இணுவில் தெற்கு, இணுவில்.**

(CS/2724) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

வர் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த ஜோய் மதுசன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி தேவாலயம் ஒன்றில் பணியாற்றும் அந்த இளைஞர், பணிநிமித்தம் முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிய போது புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பட்டா ரக வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்தார்.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## 97 வீதமான...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாவட்டத்தில் 97.2 வீதமான நிலப்பரப்பில் இதுவரை கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 2.8 வீதமான நிலப்பரப்பிலேயே கண்ணிவெடிகள் அகற்ற வேண்டிய தேவையுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பகுதிக்கு உட்பட்ட முகமாலை கிராம அலுவலர் பிரிவிலேயே குறித்த கண்ணிவெடிகளை அகற்றவேண்டியுள்ளன. இதனால் 37 குடும்பங்களை மீளக்குடியமர்த்த முடியாத நிலை காணப்படுகின்றது. பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மிகவிரைவில் ஏனைய பகுதிகளிலும் நாங்கள் கண்ணிவெடிகளை அகற்றுவோம்-என்றார். (அ-ம-113)

## வடக்கில்...

யத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தெங்கு முக்கோண வலயத்துக்கான தென்னங்கன்றுகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்காக 10 இலட்சத்து 24 ஆயிரம் தென்னங்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன. உரமும் இலவசமாக வழங்கப்படும். இதற்காக 8 கோடியே 19 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது -என்றார். (அ-ம-44)

## புதிய...

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்த நியமனத்தை வழங்கினார். மடுத்திருப்பதியில் ஐந்து நாள்கள் நடைபெற்ற மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானத்தின் நிறைவுநாளான நேற்றையதினம் இந்த நியமனம் மடுத் திருப்பதியில் வைத்து அறிவிக்கப்பட்டது.

ஒரு மறைமாவட்டத்தில் குருமுதல்வர் பதவி என்பது மறைமாவட்ட ஆயருக்கு அடுத்த நிலையில் உள்ள உயர் பதவியாகும். 1969ஆம் ஆண்டு முருங்கனில் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த இவர், 1997ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கடந்த 28 வருடங்களாக மன்னார் மறைமாவட்டத்தில் பல்வேறு பணிப்பொறுப்புக்களை வகித்துவருகின்றார். சிறந்த தமிழ் அறிஞரான அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் பத்துக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். பல சர்வதேச தமிழ் மாநாடுகளில் பங்கேற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஐஸ்ரின்...

நிறைவுக்கு வந்தது.

லிபரல் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட கனேடிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மார்க் கார்னி கனடாவின் புதிய பிரதமராக நேற்றுக்காலை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பிரதமர் ட்ரூடோ விடைபெற்றுச் சென்றுள்ளார். அவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார். (அ-ம)

## பட்டலந்த விவகாரம்...

அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் நாளை 16ஆம் திகதி ரணில் உரையாற்றவுள்ளார். இதன்போது மேற்படி அறிக்கையின் உள்ளடக்கங்கள் சம்பந்தமாக விசேட வெளிப்படுத்தல்களை ரணில் விக்கிரமசிங்க செய்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## கச்சதீவு...

தின வருடாந்த திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருநாள் திருப்பலி இன்றுகாலை ஒப்புக்கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்றதைத் தொடர்ந்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூபப் பவனி என்பன இடம்பெற்றன. இன்று காலை 9 மணியளவில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (அ-ம-125)

## பெருமளவு...

பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து 16 கிலோ 130 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ,ம28)

## மூதாட்டிகள்...

டுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 15 வயதுச் சிறுமியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அந்தச் சிறுமி படுகொலை செய்யப்பட்ட மூதாட்டிகளின் பேர்த்தி என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உயிரிழந்தவர்களின் இன்னொரு பேர்த்தியான 15 வயதுச் சிறுமியொருவர் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

கொலைக்கான காரணத்தைக் கண்டறியும்வகையில்மேலதிகவிசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். 'தனது பாட்டிகள் இருவரும் எந்நேரமும் தன்னை ஏசிக்கொண்டு இருந்தனர். இதனால், ஏற்பட்ட மனவிரக்தியால்தான் அவர்களைக் கொன்றேன்' என்று கைது செய்யப்பட்ட சிறுமி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேலதிக தகவல்கள் விசாரணைகளுக்குப் பின்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-இ)

## இந்திய...

மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் குழுவொன்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை இன்று சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

இதன்போதே, இலங்கை அரசுக்கும், இலங்கைக் கடற்படைக்கும் எதிராகக் இந்திய மீனவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன், இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களைப் பார்க்கிலும், தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில்தான் மீனவர்கள் மிகவும் அதிகளவில் கைதுசெய்யப்படுகின்றனர். எனவே, இந்திய மீனவர்களின் விடயத்தில் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் இந்திய மீனவர்கள், அமைச்சர் ஜெய்சங்கரிடம் முன்வைத்துள்ளனர்.

மீனவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த அமைச்சர் ஜெய்சங்கர், மீனவர்களை விடுவிக்க தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்று கூறியுள்ளார். அத்துடன், இலங்கை அரசாங்கத்துடன் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## பட்டலந்த அறிக்கை...

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கொள்கை அளவில் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய குறித்த அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளிப்பதற்கும், மேற்படி அறிக்கை தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் ஜனாதிபதியால் விசேட குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. அதேபோல பொருத்தமான நாளில் பட்டலந்த அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம். மும்மொழிகளிலும் உள்ள அறிக்கைகளை கையளிக்கின்றேன். சாட்சிகள் அடங்கிய இணைப்புகள் விரைவில் சபையில் முன்வைக்கப்படும்-என்றார். (அ-ம-44)

## நாடாளுமன்றத்தில்...

நாட்டில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்த பட்டலந்த படுகொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அல்ஜெஸீரா உள்ளிட்ட ஊடகங்களில் பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான தகவல்கள் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்தப் படுகொலைகளில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்குத் தொடர்புள்ளது என்றும், அவரின் குடியுரிமையைப் பறிக்கும் அளவுக்குப் பாரதூரமான விடயம் இதுவென்றும் தகவல்கள் வெளியாகிவரும் நிலையிலேயே, அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் விரைவில் வெளிவரவுள்ள நிலையில், பட்டலந்த விசாரணை அறிக்கை ரணில் தரப்புக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ, ம44)

## வடக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1971 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் அரச பயங்கரவாதம் இருந்துவருகின்றது. 1980ஆம் ஆண்டு காலப்பகுதி மற்றும் 30 வருடகால போர் என்பவற்றின்போது மனித உரிமைகள் மீறப்பட்டன. மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றன.

அல்ஜெஸீரா நேர்காணலின்போது வடக்கு மற்றும் தெற்கில் இடம்பெற்ற அடக்குமுறைகளை மறைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முற்பட்டமை பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. அடக்குமுறைக்கு உத்தரவிட்ட அரச தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கு அவர் முற்பட்டுள்ளார்.

வடக்கிலும், தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை அவர்களது உறவினர்கள் இன்னும் தேடிவருகின்றனர். தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது அவர்களுக்கு இன்னும் தெரியாமல் உள்ளது. எந்தச் சூழ்நிலையிலும் அரசாங்கமொன்று, அரச பயங்கரவாதத்தை பயன்படுத்தமுடியாது என பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குடியுரிமை நீக்கம் உட்பட பல பரிந்துரைகள் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிறிமாவோ பண்டாரநாயக்க இழைத்த போர்க்குற்றங்களுக்கு எதிராக ஜே.ஆர். ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசியற் காரணங்களுக்காகவே அவரது குடியுரிமை பறிக்கப்பட்டது. அதேபோல சந்திரிகா ஆட்சியில் பட்டலந்த அறிக்கை இழுத்தடிக்கப்பட்டது. தேர்தல் வெற்றிக்காக அதனை சந்திரிகா பயன்படுத்தினார். மாறாக பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அதிகாரத்தில் இருந்தவர்கள் அவர்களை பாதுகாத்தே வந்துள்ளனர். தற்போது ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் உள்ளது. 1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பியினரும் அதிகம் பாதிக்கப்பட்டனர். அரசியல் செயற்பாட்டாளர்கள் கொல்லப்பட்டனர். எனினும், தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார பயணமும் ரணிலின் பாதையிலேயே உள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. ஜனநாயக விரோதச் சம்பவங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி அருகாமையில் 80m தூரமும் சுண்டுக்குளி பாடசாலை 500m தூரத்திலும் புதிதாக பிரிக்கப்பட்ட
1.4 பரப்பு (1ப - 7கு), 2.8 பரப்பும் (2ப - 14 கு) கொண்ட காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- **UDA வீடு கட்டும் அனுமதி உண்டு.**
- **ஸ்ட்ரீட்லைன், உரிமை, கையளிக்கப்படாமைக் கான நற்சாட்சி சான்றிதழ்கள் உண்டு.**
- **சிறந்த சூழல்**
- **அகலமான 15 அடி - 20 அடி பாதை**
- **மின் இணைப்புக்கான அனுகல் உண்டு.**

**(தரகர் தேவையில்லை)**

(CS/29451) J-1

**076 156 2983, 077 711 5438**



## காணி குத்தகைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதி (Main Street) 4ஆம் குறுக்குத்தெருவிற்கும் 5ஆம் குறுக்குத்தெருவிற்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான வீதியை முகப்பாக கொண்ட 4பரப்பு காணி குத்தகைக்கு உண்டு.

cs/57444(S)

தொடர்புகளுக்கு - 077 900 4515 , 077 199 9608


# 2018 ஆம் ஆண்டு நடந்ததே இம்முறை மீள நடக்குமாம்

## சாகர காரியவசம் நம்பிக்கை

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 2018ஆம் ஆண்டு வெற்றிபெற்றதைப் போன்று அமோக வெற்றிப்பெறுவோம். 2029 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே அதிகாரத்தைக் கைப்பற்றும். இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் பின்னடைவை எதிர்கொள்ளும் என்பதை உறுதியாகக் குறிப்பிடமுடியும். கொழும்பு உட்பட முக்கிய பிரதேசசபைகளை நாங்கள் கைப்பற்றுவோம். 2029 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக பொதுஜன பெரமுன பலமடையும். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும், ஆட்சிக்கு வந்த பின்னரும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. மாறாக இன்றும் போலியான குற்றச்சாட்டுகளை மாத்திரம் முன்வைத்துக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். தேசிய மக்கள் சக்தி மக்களைத் தவறாக வழிநடத்தியது. இதற்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்-என்றார்.

(எ-இ)


## புதுக்கடை திறப்பு விழா

**35 வருட கால பூர்த்தியை முன்னிட்டு கோழிகள்,முட்டைகள் மலிவு விலையில்**

வாடிக்கையாளரின் நலன் கருதி உரும்பிராய் கிழக்கு கோப்பாய் வீதியில் இன்று 15.03.2025 முதல் எமது 8வது கிளையை தொடங்கியுள்ளோம்.எம்மிடம் **இன்று** விற்பனைசெய்யப்படுகிறது.

புறொயிலர் இறைச்சி -980/-
பேரன்ஸ் இறைச்சி -1200/-
கல்பேட் இறைச்சி -1100/-
முட்டை -29/-

நியூ சிற்றி கோழிக்கடை
உரும்பிராய் கிழக்கு கோப்பாய் பிரதான


## வீடுடைத்துத் திருட்டு சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 15

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் பட்டப்பகலில் வீட்டை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டினை உடைத்து 6 இலட்சத்து 10ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## கண்ணைப் பதம்பார்த்த கருக்கு மட்டை

சாவகச்சேரி, மார்ச் 15

முதியவர் ஒருவரின் கண்ணுக்குள் பனம் மட்டையின் கருக்குப்பகுதி குத்திய நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மறவன்புலவுப் பகுதியைச் சேர்ந்த 79 வயதுடைய் முதியவரொருவர் வீட்டு வேலிக்கு பனை மட்டையை வரிந்துகொண்டிருந்தபோதே இந்தப் பாதிப்பு நிகழ்ந்துள்ளது.

(ச-33-131)


## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 02 . 1997

இறப்பு
13 . 03 . 2025



**கரித்தாஸ் வன்னி கியூடெக் பணியாளர்**

# ஜோர்ஜ் மதுர்சன்

**அவர்கள் நேற்று முன்தினம் (13.03.2025) வீதி விபத்தில் காலமானார்.**

அன்னாரின் பூதவுடல் இன்று (15.03.2025) சனிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அஞ்சலிக்காக கரித்தாஸ் வன்னி கியூடெக் கிளிநொச்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டு மாலை 5.00 மணிக்கு இல 30, சூரியவெளி, நாவாந்துறை இல் உள்ள அவரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச்சடங்குகள் நாளை மறுதினம் (17.03.2025) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இயக்குநர்,**
**கரித்தாஸ் வன்னி கியூடெக்**
**கிளிநொச்சி.**

(CS28936) N-1


# வனவிலங்குகள் தரவு இன்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 15

விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வன விலங்குகள் பற்றிய தேசிய கணக்கெடுப்பு இன்று தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

வீட்டுத்தோட்டம், விவசாய நிலம், பாடசாலை, வழிபாட்டுத்தலம் மற்றும் நிறுவனங்களிலுள்ள குரங்குகள், அணில்கள் மற்றும் மயில்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வழங்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவத்தில் பதிவுசெய்து அந்தப் பிரதேச கிராம அலுவலர் அல்லது பொருளாதார மேம்பாட்டு அலுவலர் அல்லது சமுர்த்தி மேம்பாட்டு அலுவலர் அல்லது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரிடம் கையளிக்குமாறு விவசாய, கால்நடை வளர்ப்பு, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு அறிவித்துள்ளது.

(ச-இ)


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கில்
8 பரப்புக் காணி (4 + 4 பரப்பு)
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 0540 446
or
0049 1788 290406
S.A.Nirmalakumar



## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57653) J-1

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.